ஓலை 91 | ஓசை 214 | அக்டோபர் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு

## பொருள்

தனக்கு உற்ற துன்பத்தை பொறுத்தலும், மற்ற உயிர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகிய அவ்வளவே தவத்திற்கு வடிவமாகும்

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

பா வகை: நேரசைக் கட்டளைக் கலிப்பா

## ஏவா மக்கள் மூவா மருந்து!




கற்பின் மங்கை கனிந்துமே ஏவுமுன்
கார்கால மில்லை யெனினும் மழையும்
நிற்கா மலேதான் பொழிந்திடும் பாங்காய்
நீங்காக் குளிர்சூழ் நீரின் குணத்துடன்
பற்றினைக் கொண்டுமே பாங்காய் உவந்து
பாதம் வணங்கி வினவுமுன் போற்றி
பெற்றோர் தமையும் பிள்ளை முதுமையில்
பேணி உதவியே காத்தல் மருந்தே!

வானமும் ஆணை இடாமலே தானாய்
வந்து நிலவும் கதிரும் ஒளியை
ஆன வரையிலே அல்லும் பகலும்
அள்ளி வழங்கும் அருமைக் குணமும்
ஊன மிலாம(ல்) உதவும் உறவால்
ஊனையும் பேணும் மருந்தென வேண்டும்;
மானம் மதிப்பு வினவியே கேளா
மாண்பு நிறைந்தால் மருந்தா குமாமே!




பாலும் நடக்கவே சொல்லவே வேண்டா;
பாலிலே நெய்யுமே தானாய்த் திரளும்;
காலும் அடிபட சொல்லித் தராமல்
கண்கள் அழுமே; கருணைப் பிறக்கும்;
நூலும் நடந்திட நூலறி வேறும்;
நொடிந்து போகா உணர்வை உணர்ந்து
காலும் நடக்கக் கனிந்தே உடலின்
காக்கும் மருந்தாம் குறிப்பும நிந்தே!

இலக்கணக் குறிப்பு:
நான்கு அடிகள் எண்சீர் மண்டிலம் போல, எட்டுச் சீர்களைப் பெற்று வரும். நான்கு சீர்கள் அரையடியாக வரும். அடுத்த அரையடியை கீழே மடக்கி உள்தள்ளி எழுதவேண்டும். ஆக எட்டு வரிகள் ஒரு பாட்டாக வரும். நான்கடிகளுக்கும் ஓரெதுகை பெற்று வரும். நான்கடிகளையும் நேரசையில் தொடங்க வேண்டும். முதல் சீருக்கும் ஐந்தாம் சீருக்கும் மோனை அமைய வேண்டும். கட்டளைக் கலித்துறைப் போல எழுத்தெண்ணிப் பாட வேண்டும். அரையடிக்கு மெய் நீக்கிப் பதினோரு எழுத்துக்கள் வரவேண்டும். மா + விளம்+ விளம் + விளம் என்ற இயற்சீர் வாய்பாட்டில் எழுத வேண்டும். பாட்டு முடியும் போது ஏகாரத்தில் முடிதல் வேண்டும்.

நெருப்பலைப் பாவலர் இராம.இளங்கோவன்

## பா வகை : நேரிசை வெண்பா

**கன்னலாய்ப் பேசுவாய் காதிலே தேன்பாயும்**
**தன்னல மில்லாமல் துள்ளியே -மின்னலாவாய்**
**உன்னையே உள்ளிடும் உன்மத்தன் ஆனேனே**
**கன்னியே நீயே கதி.**



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை



அகர முதல

# அரணாக விளங்கு

பா வகை : ஆசிரிய அறுசீர் மண்டிலம்
காய் +காய்+காய் +காய்+மா+தேமா

பெற்றவரே பிள்ளைகளைக் காக்கின்ற பெருவலிமை
பெற்ற அரணாம்;
கற்றவரே நன்னெறியில் உலகினையே நெறிப்படுத்திக்
காப்பர் அரணாய்;
நற்பண்போ எந்நாளும் மாந்தருக்கே மகுடமென
நிற்கும் அரணாய்;
தற்பெருமை இல்லாத தகைமையையும் தரையினையே
தாங்கும் அரணாய்!



கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# மகிழ்ச்சி

பதிமூனு வயசுல
பாட்டி கல்யாணமாகி
புகுந்த வீடு வந்தப்ப
ரெட்டமாட்டு வண்டியில
சீதனத்தோட சீதனமா வந்ததாம்
எங்க வீட்டுக்கு
இந்த உரலுக்கல்லு.



கிரைன்டர் மிக்ஸின்னு
விஞ்ஞானம்
விரிஞ்சப்புறம்
இந்த உரலுக்கு
வேலை இல்லாம போயிடுச்சி.

டெங்கு காய்ச்சலுக்கு
ஆங்காங்கே
தேங்கிக் கிடக்கிற தண்ணியில
உண்டாகிற கொசுதான்
காரணம்னு
அடிக்கடி டி.வி யில
காட்றாங்க.

குழந்தை குட்டிங்க
உலாவர இடமாச்சேன்னு
உரல்ல தேங்கிக் கிடக்கிற
மழைத்தண்ணிய
வழிச்சும் தொடச்சும் விடுறா
எங்கம்மா.

இப்படியாச்சும்
உரலு கவனிக்கும் படியா
இருக்கேன்னு
மனசுக்குள்ள மகிழ்ச்சி
பாட்டிக்கு.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# அரண்

## அதிகாரம் : 75




அறிவோடு பெருமையும்
ஆண்மையுமான சிறப்புடன்.
படைக்கஞ்சி தமையடைந்தோர்க்கும்
புகலிடந்தரும் சிறப்புமேயரணாம்.

நீலமாஅகழியும் விரிமாநிலமும்
உயர்மாமலையும் பெருமாவனத்தின்.
நிழலுமாமிந்நான்கும் உடையதே
பாரினிற்கு அரணாம்.

உயர்ந்த அகண்ட
உறுதியுடன் பகைஞரழிக்கவியலா.
அருமையுமாம் இந்நான்குமே
நல்லரணென்பது போரியல்நூற்கூற்றாம்.

காக்கவேண்டுநிலம் சிறிதாயும்
வெற்றுநிலம் பெரிதாயுமாகி.
பகையெதிர்க்க வல்லதுமாய்
அமைந்திருப்பதே நல்லரணாம்.

பகையோன்கைக்கு அரிதாயும்
ஊண்மிகக் கொண்டதாயும்.
உள்ளிருந்து போர்புரிதலுக்கெளிதாயும்
உள்ளதே நல்லரணாம்.

உள்ளிருப்போர்க்கு நிறைபொருளுடன்
போருக்கு எதிர்க்கவல்ல.
வீரர்களுடையதாயும் பொருந்திய
பார்நிலமே நல்லரணாம்.

பகையோன் முற்றுகையிடினும்
இடாது திடுமெனத்தாக்கிடினும்.
வஞ்சித்துக் கைப்பற்றவியலா
அருமையுடையதே நல்லரணாம்.

சூழ்பகையின் பெரும்படையையும்
காழ்கொண்டு முன்னேறவிடாது.
உள்நின்றே வீழ்த்தவல்ல
சூழ்பொருந்தியதே நல்லரணாம்.

சூழ்கொண்ட பகைஞர்
போர்முனையின் படியிலேயே.
காலிடறியோட போர்செய்யும்
வீறுகொண்டதே நல்லரணாம்.

எவ்வகைக் காவலிருந்தும்
அரண்காக்கும் செயல்வகையில்
சிறப்புடை மற்றோரில்லாதரண்
பயனற்று அழியுமாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

காதலைச் சுமந்த அழகு
கண்முன் நிற்கையில்
கண்டு கொள்ளாது
எங்களிடம் தேடுவதேனோ என
நிழற்படங்கள்
ஏளனம் செய்கின்றன.

காமத்திரை வந்து
கண்களை மூடியது
ஆசை வலை விரித்து
உள்ளம் அலைகிறது
எழுத்துகளின் நிர்வாணம் பெருக்கி
கரம் இளைப்பாறுகிறது
உன் காதல்
என்னைக் காணும் வரை.



பரிசுகளின் பவனியில்
உலகத்தின் தேடலில்
வழிந்தோடும் மொழிகளில்
காதல் பறவையென
சிறகோடு வருகிறேன்
காலம் பிரிவு வலை விரிக்க
நேசம் நினைவுக்கரம் நீட்டுகிறது.

அழகுகளின் நெடு எல்லையில்
அவளைக் கண்டேன்
அகராதிகளின் அதிபதியாய்
அலைந்து கொண்டிருந்தவன்
ஆராதனைகளின் அடிமையாய்
உருமாறிப் போனேன்.

கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# நம்பாதே

ஒரு நொடிக்குள் மாறும் உலகம்!
விழிகளை மூடாதே,
மூடுகின்ற ஒரு நொடிக்குள்
உனக்கு மூடுவிழா
காணும் கூட்டம் காத்திருக்கு,
விழிப்புடன் இரு.
சுயமாய் ஓட முடியாதவன்
உன் காலை தடுக்கிவிடுவான்!
உன் வாய்க்கு கொண்டு செல்லும்
உணவைக் கூட
உனக்கே தெரியாமல் விழுங்கிவிடுவர்!
உன் கழுத்து விழவேண்டிய
வெற்றி மாலையை,
உன் கழுத்தை எடுத்தாவது
தன் கழுத்தில் விழவிடுவர்!
உன்னைப் புகழ்ந்து புகழ்தே
உன்னை புகழுக்கு பைத்தியமாக்கி
மற்றவர்களை பகையாக்கும்
தந்திரம் உடையவர்கள்!
பழிபோட்டு உன்னைப் பாவியாக்குவான்
அவர்களை அப்பாவியாய் காட்டுவர்!
உன் சொத்தைப் பிடுங்கி
உனக்கே பிச்சைப் போடுவர்!
நட்டக் கணக்கைக் காட்டியே
புதையலைக் குவிப்பர்!
தள்ளாக்குளம் கட்டித்தரேன்னு
பள்ளத்தில் தள்ளிவிடுவர்!
துணையாய் நான் இருப்பேனென்று
தூக்கில் மாட்டிவிடுவர்!
போகப் போக சரியாகிவிடுமென்று
நாம் போய்ச்சேர வழிகாட்டுவர்!
யாரையும் நம்பாதே
எதிலும் நம்பாதே
எப்போதும் நம்பாதே
எங்கேயுமா நம்பாதே



கவிஞர் ஏதல்விழி, இராணிப்பேட்டை மாவட்டம்

# தமிழ்ப்பகைவர்

தீங்கிழை கொடுங்கோலன் வீழ்க!
குடிக்கெடுத்த கயவர் கோ கடிந்தொழிக!
சுங்கம் மறுத்த மா நிலத்தில்
சுங்கம் பறிக்கும் சுரண்ட லரசு
சுருங்கிப் போகுக.


கொடியோர் கொற்றம் வீழ
கள்வர் செருக்கு நொறுங்க
தமிழ்ப்பகைவர் செத்தொழிந்திட
தென்கதிர் கூற்றுவன் ஆகுக.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# யானை போகும் பாதை

நான் போகும் பாதையை
மறித்து வீடு கட்டி வாழ்கிறாய்!
எனக்கு உண்பதற்கு வழியில்லாமல்
காட்டை அழித்து கட்டடம் கட்டுகிறாய்!
மரமின்றி மழையில்லை
நீரின்றி யாருமில்லை!
பிழைப்பதற்கு நீ ஊர் ஊராய்
இடம் மாறுகிறாய்!
உண்பதற்கு எனக்கு வழியில்லாமல்
ஊருக்குள் நான் நுழைந்தால்
மின்சாரத்தால் என்னை அழிக்கிறாய்!
உன்னை அண்டி வாழாத என்னை
வாழ விடாமல் செய்கிறாய்!
உன்னுடைய வாழ்க்கைக்காக
என்னை வைத்து பிழைக்கிறாய்!
மனிதநேயம் மறந்த உனக்கு
தக்க நேரத்தில் நான் உதவ!
நன்றி மறந்த நீயோ என் நலனை
எண்ணிப் பார்க்க மறுக்கிறாய்!
நீ போகும் பாதையில்
புல்பூண்டு முளைக்காது!
நான் தேவையின்றி யாரையும்
அழிப்பவனல்ல!
எனக்கான பாதையை விட்டுவிடு
சாது மிரண்டால் காடு கொள்ளாது!
என் பெரிய உருவத்தால்
உன்னை துவம்சம் செய்வேன் என்பதை மறந்து
நீ ஆட்டம் போடுகிறாய்!
பாதை மாறிய உன் பயணத்தை
மாற்றாவிட்டால் என்னுடைய
பயணம் எப்போதும் உன்னைத்
தொடருமென்று நினைவில் வைத்திரு!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# தமிழ்

எழுத எளிதான  ஒரு மொழி!
பழகப்  பழக  விரல் வழி
ஒழுகி வடிவம் பெறும் மொழி.
எழுதும் சொல். சொல்லும் பொருளும்
இணையும் இயற்கை வேர்ச் சொல்;
இணையும் ஓர் எளிய பாங்கு
உயிரும் மெய்யும் சேரும்  அற்புதம்
சிறாரும் எழுத்துக் கூட்டியே வாசிக்க
இயலும் தனிப் பெரும் சிறப்பு
முன்னும் பின்னும் ஓடாமல் கைவிரல்
சுக்கான் நகர, தாமே சொற்கள்  வந்து
அமையும் நளினம்
எம்மொழிக்குச் சொந்தம்?
பா ஒன்று நான் புனைய
முனைய, யாப்பிலக்கணம் முன் வந்து
ஆசான்  போல் பாடம் சொல்லும்.
பாடலுக்கு அணி  செய்யப் பலவகை
அணி இலக்கணங்கள்;
அண்மையில் அணியாய்.
வந்து அமையும்;அழகு தமிழில்.
மரபுக் கவிதைகளும் புதுக் கவிதைகளும்
கரம் கோர்த்துப் பயணம் செய்வதே
தமிழின் தனித்துவச் சிறப்பு என்றே
தன்னெஞ்சு நிமிர்த்திச் சொல்வேன்.




கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# மரிக்கொழுந்து வாசத்திலே

## மரிக்கொழுந்து வாசத்திலே
## மாமனவன் நேசத்திலே

நெஞ்சுக்குள்ளே வச்சிருக்கேன்
நெதமும் நெனச்சிருக்கேன்
வயசுபுள்ள காத்திருக்கேன்
வாடாம பாத்துக்கய்யா

மல்லிகைப்பூ சூடியிருக்கேன்
மச்சானே வாருமய்யா
கன்னமும் செவந்திருக்கு
ஒன்னோட முத்தத்தாலே

காதலும் உண்டாச்சி
வெட்கமும் வந்திருச்சு
எம்மனச புரிஞ்சுக்கய்யா
என்னைத்தான் ஏத்துக்கய்யா

அரும்பு மீசக்காரா
கட்டழகு மேனிக்காரா
ஆத்தோரம் ஆலமரத்துல
ஊஞ்லொண்ணு கட்டுமய்யா

அந்திசாயும் நேரத்திலே
ஆனந்தமா ஆடலாமே
தோளிலே சாஞ்சிக்கிறேன்
மெல்லத்தான் அணைச்சுக்கய்யா



குதூகலமாகும் மனசு
வாலிப வயசு
மரிக்கொழுந்து வாசத்திலே
மாமனவன் நேசத்திலே

வசியம் பண்ணி
போவதென்ன நில்லுமய்யா
வெள்ளக்கட்டி பேச்சுலதான்
உருகித்தான் போனேனே

பவுசு காட்டாதய்யா
பரிசந்தான் போடுமய்யா
கண்ணாலம் பண்ணிக்குவோம்
சந்தோசமா வாழ்ந்திடுவோம்


கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# ஒளி ஏற்றும் தீபங்கள்

உள்ளத்தின் இருளை நீக்க வந்த
ஆதவர்கள்.
கல்வி சாலையில்
அறிவூட்டிய தீபங்கள்.

எதிர்பார்ப்பின்றி
மாணவனின்
எதிர்காலம் தேடுபவர்கள்.
ஏணிப்படியாய் நின்று
ஏற்றி விடுபவர்கள்.

நேர்மையையும் எளிமையையும்
ஊட்டிவிடும் எழுத்தறிவுகள்.



இளமையில் கல்வியை
இயைந்தே வழங்கியோர்.

மாணாக்கனின்
வருங்காலத்தை
செம்மையாக்கும்
வித்தகர்கள்.
எந்நாளும் கற்றுத்தரும்
கலங்கரை விளக்கங்கள்.

*கவிஞர் இரஜகை நிலவன், மும்பை*

# குறுங்கவிதை

வாரி வாரி வழங்க
வள்ளல்கள் சிலரும்
வாங்கி வாங்கி மகிழ
இரவலர் ஒருவரும்
இருந்தால் போதும்
அடங்க மறுக்கும்
அடைமொழிகள்



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# இதழ் அழகே

அடியே - என்
இதழழகே
உன் இதழ்களின்
இருப்பிடத்தில்
அமிழ்த்தின் சுவை
அறிந்தன வண்டுகள்
அனைத்தும்



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# யாருக்குதான் தேவையில்லை?

அவன் தங்க கரண்டியோடு பிறந்தவன்
மூன்றாம் தலைமுறை தொழிலதிபர்
அமெரிக்க மேலாண்மை படிப்பு
பணத்தை திருமணம் செய்தவன்

தாத்தா சைக்கிளில் வாழ்வை தொடங்கியவர்
அதைச் சொல்ல தொடங்கியதும்
ஹி இஸ் போரிங் டாட் என்பான்
பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அவன் தந்தை



அப்பாவுக்கு உழைப்பின் மீது அபார பற்று
மகனுக்கு தொழில்நுட்பமே கடவுள்
அப்பாவுக்கு மனிதநேயமே மகத்தானது
மகனேக்கோ ஏழைகள் எட்டிக்காய்கள்

ஆடியும் பிஎம்டபிள்யூம் அவன் அடையாளம்
நட்சத்திர ஓட்டல்களே அவன் ஜாகை
தலைமுதல் கால்வரை பிராண்ட்
தலைக்கனம் உடலில் முக்கால் பாகம்

கெட்ட பழக்கத்தில் ஒரு நல்ல பழக்கம்
சிகரெட்டுக்கு பள்ளி நண்பன் கடைவாசலில் நிறுத்துவான்
அவன் பரபரப்பாவதை இரசிப்பான்
ஐந்நூறை நீட்டி விட்டு கணக்கு வைச்சுக்கோ என்பான்

அன்று கடையில் வாசலில் நிறுத்தி விட்டு
புதைத்துவிட்டு திரும்பியவனுக்கு அதிர்ச்சி
அழுக்கு மனிதனொருவன் காரருகே நிழலாட்டம்
அருகே சென்றான் அவன் காரைத் துடைத்து கொண்டிருந்தான்

அருவருப்புடன் விரல்களால் நிராகரித்து
காரை விருட்டென்று கிளப்பினான்
அதுவே வாடிக்கையானது
இவன் எரிச்சலும் கூடியது

ஆனாலும் ஓசியில் கார் சுத்தமாய் பளப்பளப்பாய்
ஒரு நாள் கேட்டே விட்டான்
ஏதாவது உதவி? பர்ஸை எடுப்பதற்குள்
யாருக்குத் தான் தேவையில்லை?

பலபேர் கோவிலுக்கு உள்ளே
சிலபேர் கோவிலுக்கு வெளியே
சொல்லிக் கொண்டே நகர்ந்தான்
திரும்பிக்கூட பாராமல்

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு திருச்சி

# துளிப்பாக்கள்



சிலந்தி வலை
விடுதலை பெறத் துடிக்கிறது
அகப்பட்ட கொசு
***

கதவைத் திறந்ததும்
உடனே உள்ளே வரும்
காத்திருந்த பூனை
***

குளக் கரையில்
அமைதியான ஊர்வலம் நடக்கிறது
ஆமைகளின் நகர்வு
***

தொங்கும் நூல்
நெடுஞ் சாலையாகிறது
தடுமாறிய எறும்புக்கு
***

வானவில்
மறைந்து போகிறது
அரிய விலங்கு

கவிஞர் விவேகவனி தவேழேந்திரன், வெல்லவதியான், (இலங்கை)

# ஓய்வின்றி

காலையில் சூரியனாய் எழுந்து
இரவில் நிலவாய் தேயும்



பெண்மையின் ஓய்வறியா பொழுதுகள்
தினந்தோறும் நின்று போன நிமிடங்களாய்

காலை பொழுதுகள் சமையலறையில்
பாதயாத்திரைகளாய்

பாத்திரங்களின் தேய்மானத்தில் இவளும்
தேய்பிறையாய்

சாம்பாரும் சாப்பாடும் இவளின் கடமைகளாய்
பழைய சோற்றின் நிரந்தரமான பசி இவள்

மதிய நேரங்களில் இவள் அனுமதி இல்லாமல்
இமைகள் ஓய்வெடுக்க மனமோ

மாலைநேர சமையலறை மாநாட்டுக்கு வழி தேட
பல இரவுகளும் இவள் விருப்பம் இல்லாமல்


வேட்டையாடப்படும் வேதனையின் நொடிகளாய்
சாப்பிட்டாயா என்ற குரலுக்கு உடைந்து போகும்

பெண்மையின் உணர்வுகளை மதிக்க வேண்டாம்
மிதிக்காமல் இருந்தாலே போதும்

கவிஞர் ரா.பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# வாழ்க நித்தம் நின் சேவை

கதிரோனின் உதயத்தில்
கவி பாடும் சித்திரங்கள்
சிலையாக தொழும்
எங்கள் ஆசானே நீ!



இலசுகளின்
இச்சையினை
இலகுவாக வெளிக் கொணர்ந்தாய்.
இலை மறை காய்களை
இனம் கண்டு எல்லோரும்
புகழச்செய்தாய்.

அன்பில் அறவோறாகி
ஆய்வில் ஆசனாகி
இசைப்பொறியில்
இசைமடந்தையாகி
ஏச்சினிலே எங்களை ஏகனாக்கி
ஐய்யுருவில் எங்களின்
ஆசான் ஆகினாய்.

நின் சேவையில்
நிதமும் நாங்கள்
நீச்சல் அடிக்க
ஏகாந்த ஏடனாகி
ஏற்றளவில் எங்களை
ஆற்றுப்படுத்தினாய்.

ஒற்றலரிடத்தில் ஒன்றுனவாகி
ஓதும் வேதத்தின் ஓவியம் ஆகி
ஔடதமாகி மாணவர்களின்
அறிவுக்கண்ணைத் திறந்து
ஆசீர்வதித்தாய்
ஔவியும் பேசேல் - என
கற்றுத் தந்தாய்.
நின் சேவையின் மகத்துவம்
இவ்வுலகில் நிலைபெற
நிசந்தனிடம்
நித்தியம் செய்கிறேன்
நிதமும்!

கவிஞர் திருமதி மோகன், நாவலப்பிட்டி (இலங்கை)

# நினைவுகளுடன்

வாழ்வென்னும் பாலத்தில்
நாம் பதித்த கால்தடங்களும்
உன்னுடனே கை கோர்த்து
இரசித்த நாட்களும்
இனிமையானவைகள் தான்

எத்தனை வலிகள் எண்ணற்ற பேச்சுக்கள்
அனைத்தையும் மறந்து இன்பமாய்
உன் காதலில் வாழ்ந்த தடங்களை
மெய்மறந்து சிலிர்க்கிறேன்

கடந்து வந்த எந்தன்
வாழ்க்கையும் என்றுமே
அழியாத வடுவாய்
நினைவுகளிலே சிக்குண்டு
தவித்த எண்ணங்களுக்கு
பாலமாய் எனை தாங்கியே அதனை
கடந்திட துடித்து தன்னையே மறந்து
எனக்காக பாடுபடும் உன் நேசமே
என் நெஞ்சத்தில் தென்றலாய்

எத்தனையோ ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும்
அனைத்தையும் தூர எறிந்து ஊன்றுகோலாய்
எனை தாங்கியே நிறுத்தி அழகு பார்த்திடும்
உன் பேரன்பு

எனை நீங்காத பாலமாய் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல்
பயணித்திடும் உந்தன் கரங்களை பற்றியே
நானும் உனை தாங்கிடும் தூணாய்
வலம் வந்திடவே உன்னுடனே கோர்க்கின்றேன்

என்றும் அழியா நினைவுகளுடனே
எத்தனை கரடு மேடுகள் வந்தாலும் பள்ளங்கள் விழுந்தாலும்
உறுதியான நம்பிக்கையோடு இணைந்தே வாழ்ந்திட
சுவாசிக்கிறேன் உந்தன் ஜீவனோடு

வாழ்க்கை என்றால் மேடு பள்ளம்
இருக்கதானே செய்யும்
அங்கே சமநிலை தேடுவதை விட
சமாளித்து ஓடுவதுதானே புத்திசாலித்தனம்

உன் இணையாய் வெற்றி பாலமாய்
இணைந்தே ஓடிடுவேனே
உந்தன் நினைவுகளோடே.



கவிஞர் ஜோஸ்குமரன், திண்டுக்கல்

# விதியின் விளையாடல்

வண்ணங்கள் கொண்டாலென்ன
வடிவங்களில் பிறந்தாலென்ன
வலையில் அகப்படும் வரைதானே
மீனுக்கும் சுதந்திரம்.

தொல்லைகள் வந்தாலென்ன
சோகங்கள்தான் தந்தாலென்ன
கண்மூடும் வரைதானே
தீராத போராட்டம்.

சிதைந்தோடும் எண்ணங்களும்
கலைந்தோடும் கனவுகளும்
இங்கு எல்லோருக்கும் தாராளம்
வரும் வடிவங்கள் தான்
ஏராளம் ஏராளம்.

வண்ணங்கள் மட்டுமென்றால்
வாழ்வெல்லாம் பூக்கோலம்
வாடி வீழ்ந்தால்
யாவுமிங்கு பூபாளம்
வாழ்தலும் வீழ்தலும்
விதியின் விளையாடல்.

மகிழ்ந்தவை எல்லாம் மாறிலி அல்ல
நினைப்பவை எல்லாம்
நிரந்தரமும் இல்லை.
நிகழ்காலங்களை அழகு படுத்துங்கள்
எதிர்காலம் உங்கள்
எண்ணம் போல் மலரும்.



மரணம் என்பது
மறு வினாடியில் வரலாம்
மாளிகையில் நாம்
வாழ்ந்தாலென்ன
மறுமைக்கான சேமிப்புகள்
வெறுமையனால் என்ன லாபம்.
மதிகெட்டுப்போய் நாம்
விதியை நோகலாமா.

கவிஞர் செண்பகச் சோலையான் ஆய்ஷ்

# சிகப்பு பெட்டி

உள்ளத்தை காகிதத்தில் உரையவிட்டு
வார்த்தை மைகளில்
வாழ்வின் நிகழ்வை வழி மொழிந்து

கொஞ்சும் காதல் மொழிகளும்
கெஞ்சும் உதவி வரிகளும்

பிறர் காணாமல் உரையிலுட்டு
சிகப்பு புறாவாய் தபால் பெட்டி
காக்கி தூதுவனாய்
தபால்காரர்

சிலருக்கு தேவதூதனாய்
கடன்பட்டோருக்கு
கால வாகனனாய்
காட்சி தருவார்.

கைகளில் தவழும் கடிதம் கண்டு
கண்ககளில் மகிழ்நீர் சுமந்ததோர் காலம்.
அடுத்த கடிதம் வரும்வரை
ஆயிரம் முறை
இக் கடிதம் படிக்கப்படும்.
அது ஒரு அழகிய காலம்
கடிதத்தை கடவுளாய் கண்ட காலம்.

"சார் தந்தி "என்ற குரல் கேட்டாலே
இருதயம் தொடங்கி
இருக்கால்கள் தனியே கழண்டது போல்
மொத்த தேகமும் தந்தியடிக்கும்.
இன்றோ
வாட்சப்பிலே அட்சதை போட்டு
ஆசிர்வதிக்கும்
அவசர காலமிது




முகநூலில் சாந்தியடைய
மலர்வளையம் வைக்கும்
அலங்கோல வாழ்வுமிது

இன்றும்,,
ரோட்டோரம் தொங்கும் சிகப்பு பெட்டி
வயது முதிர்ந்த பலரின்
வண்ண காதலி .

காதலியின் உதடுகளின்
நினைவைப்போல

கவிஞர் சரவணன். மு, மயிலாடுதுறை

# வெளிச்ச இரவுகள்

நூறு நாட்கள் மரணப் படுக்கையில்
உன்னோடு நான் இருந்த ஒவ்வொரு
நொடியிலும் நாடி நரம்புகள் அறுந்தன
கைகள் இரண்டும் கட்டி இருந்தாலும்
பார்வையிலும் பயத்திலும் சில நிமிடம்
தனியாக நின்று கண்ணீரோடுப் போராடினேன்
உன்னைத் தொட்டணைத்த எனது கைகள்
எனக்குள்ளே மௌனமாய் கதை பேசின
வலிகளோடு நானும் பழகி விட்டேன்
இரவு முழுவதும் நித்திரை இல்லை
துடியாய் துடித்தாய் உணவும் செல்லாது
இல்லம் சூழ சொந்த பந்தங்கள்
பார்த்து விட்டு செல்ல இறைவனின்
அழைப்பு மணி அடித்ததோ எண்ணினேன்
பேச்சு மூச்சு இல்லாமல் நாட்கள் ஓடின
பார்க்காத வைத்தியம் இல்லை உனக்கு
ஓடினேன் ஓடிக் கொண்டே இருந்தேன்
இறுதியில் கட்டி அணைத்து முத்தமிட்டேன்
அவள் இதயத் துடிப்பு கேட்க
என்னை ஈன்றெடுத்தவள் மரணப் படுக்கையை
வென்று புதிய பிறவியாய் உருவெடுத்து
என் கண் முன்னே அவளுக்கான
வேலைகளை செய்து வெளிச்ச இரவுகளாய்
வெளிச்சம் கொடுத்தாள் எனது கண்மணி.



கவிஞர் ம. செ. அ. பாலா பேகம், நாகர்கோவில்

# அருள்வாய் கலைவாணி தாயே

கலைவாணிதாயே குமரகுருபரர் உனைப்போற்றி பாடியசகல
கலாவல்லி மாலைக்கு இரங்கி வந்தாய் நீயே!
குமரனும் நானுமுன்னை கும்பிட்டும் பார்த்தேன்;
குமரகுருபரர் பாடியதையும் பாடியும் கேட்டேன்!
கலைகளின் தேவியே எனைநீயேன் கடைக்கண்
கொண்டு பார்க்கக்கூட வில்லையே இன்றுவரை!

நவராத்திரி என்பதொன்பது நாள்விழா என்றாலும்
நவராத்திரி நாயகி என்பது நீதானே!
நவக்கிரகம் ஒன்பதும் அடியேன் என்னை
நாயாய்ப் படுத்தி எடுப்பது ஏன்தாயே!



கல்வி கேள்வியில் சிறந்தவனாய் நானிருக்க
கலைமகள் உனைத்தொழுது வாழ்ந்து வந்தேன்;
கற்ற கல்வியை எடுத்துரைக்கும் ஆசானாய்க்
காலச்சுழற்சியில் நானானாலும் கவிதைநூலோ
கட்டுரை நூலோ நாடக நூலோ
கதையோ புதினமோ அடியேன் படைத்திட
கற்பனைவளத்தை நீயெனக்கு இனியேனும் தாராயோ?

தீமை நடவாதிருக்க புவிவாழ்வோர் புத்தியில்
தாயே நீவந்து வாழ்ந்திட வேண்டும்;
மதியிலார் செயல்கள் மலிந்து போனநாளில்
மனநிம்மதியுடன் மனிதர்கள் நாங்கள் வாழ
மகிழ்ந்தே நீயும் அருளிட வேண்டும்!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# நன்றி வணக்கம்



வாசித்தலிலே நேசமுண்டு
நேசத்திலே பாசமுண்டு
பாசத்திலே சுவாசமுண்டு
சுவாசத்திலே பல ஏக்கமுண்டு

ஏக்கத்திலே தாக்கமுண்டு
தாக்கத்திலே நோக்கமுண்டு
நோக்கத்திலே நன்மையுண்டு
நன்மையிலே பல மாற்றமுண்டு

மாற்றத்திலே மகிழ்வுமுண்டு
மகிழ்வினிலே பறந்ததுண்டு
பறந்ததிலே பல கற்றதுண்டு
கற்றதினால் சொல்லிக்கொடுத்ததுண்டு

கொடுத்ததிலே தெரிந்ததுண்டு
தெரிந்ததிலே அறியாததுண்டு
அறியாததிலே குழப்பமுண்டு
குழப்பத்திலே பல தெளிவுகண்டு

தெளிவினிலே படித்ததுண்டு
படித்ததிலே சில எழுதியதுண்டு
எழுதியதிலே பலர் கேட்டதுண்டு
கேட்டதிலே பல திருத்தியதுண்டு

திருத்தியதால் முன்னேற்றமுண்டு
முன்னேற்றத்திலே நின்றதுண்டு
நின்றதினால் சிறந்ததுண்டு
சிறந்ததினால் வளர்ந்ததுண்டு

வளர்ந்ததினால் தங்க மெடல் வாங்கியதுண்டு
வாங்கியதிலே வாசகர்களுக்கும் பங்குண்டு
பங்கினிலே நான் சிற்சில வரித்துண்டு
வரிகளால் நன்றி வணக்கம் கூறுகிறேனே!

என் இனிய வாசகர்கள் அனைவருக்கும்
என் மனதார நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

*கவிஞர் நிலாசுபாஷ், ஆக்கூர்*

# கலங்கிடாதே

நீங்கள் கற்களை எறிவதால்
நான் கலங்கிட வில்லை.
உங்கள் கற்களை எல்லாம்
உள்வாங்கிதான்.
உத்வேகம் கொண்டு நதியாய்
பாய்ந்து ஓடுகிறேன்.
நீங்கள் எறிந்து கொண்டே இருங்கள்.
நான் பாய்ந்து ஓடிக் கொண்டே இருப்பேன்.



கவிஞர் கு. ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி, மதுரை

# என்னவனின் காதலி

என்னவனை எழுத்தால் நிரப்பிட
வார்த்தைகளை தேடிய பயணம்.
அகத்தின் மழலையானவன்
பூவின் மென்மையானவன்
புன்னகையின் வண்ணம் பூவிதழாய் சிறகடிக்க.



மென்காற்றின் சிகை அசைய
சிலையென துடித்தேனே
கணாளன் அழகில்.
இருதயம் படபடக்க
விழி நேரெதிரே காணாது
நாணி நகைக்க

சற்றும் எதிர் பாரா
என்னவனின் கண்ணசைவில்
கரத்தின் விரலிணைத்து
விடுப்பு போராட்டம் நடத்திட
வில்லங்கமாய் நெற்றியில் இதழ் பதிக்க.

உச்சி அதிர்ந்து மெய் சிலிர்த்து மாரோடு
படர்ந்தவள் இறுக அணைத்து
மழலை போலே மணாளன்
மனதில் மன்றாடி புகுந்தே
மத்தியில் குடி புகுந்தாள்.

காதலா காமமா கணித்திட நிமிடமின்றி
நித்திரையில் அவன் பெயரை நாவைக்க.
இறுக்கி அணைத்தே
மென்னுடல் படர ஓர் முத்தத்திற்கு
ஏங்கி விழி திறக்க
கட்டியணைத்திருந்தாள் தலையணையை.

அலைப்பேசி தழுவி விரல் பற்ற
தட்டச்சில் தட்டிவிட்டாள்
ஒற்றை குறுஞ்செய்தியை.
I miss u dr என்று தொலைதூரத்தில்
பயணித்திருக்கும் கணாளனின்
காதலில் கரைந்தவள்.

காத்திருப்பின் காதலில்
சுகித்து மறைத்தாள் விழி நீரை.

*கவிஞர் ச. கார்த்திகா, புழுதி*

# உனக்கான அடையாளம்

முயற்சி கொண்டு
உழைத்து வாழ்ந்திட
பயணிக்கும் வாழ்க்கையில்
பயன்கள் கிடைத்திடும்

இன்பத்தை மட்டும்
எதிர்பார்த்து வாழாமல்
துன்பம் வருகையில்
எதிர்கொள்ளத் துணிந்திடு

ஏமாற்றும் உலகில்
ஏமாறாமல் வாழ்ந்திட
எதிலும் எப்போதும்
விழிப்பாய் இருந்திடு

உறவை அழித்திடும்
பொறாமை களைந்து
குரோத எண்ணங்களைக்
குழிதோன்றிப் புதைத்திடு

அழியாச் செல்வம்
அறிவைத் தேடி
அண்டசராசரத்தில்
பறந்து திரிந்திடு

முதுமை எட்டி
முடியாமை முகிழ்வதற்குள்
இளமைக் காலத்தை
சீராக்கி மகிழ்ந்திடு



நட்பையும் கற்பையும்
கண்ணெனக் காத்து
நானில வாழ்க்கையைப்
பொன்னென மதித்திடு

பெரியோர் சிறியோர்
வறியோர் உட்பட
உதவி மகிழ்ந்து
உவகை அடைந்திடு

நாளையே மரணம்
உனை அடைந்தாலும்
நாலுபேர் மனதில்
நிலைத்திட வாழ்ந்திடு

காலமும் நேரமும்
கடுகதியாகக் கரைந்திடும்
உனக்கான அடையாளத்தை
நீயே ஏற்படுத்திக்கொள்

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர், இலங்கை

# நிலைபெறா கனா

கண்ட கனாக்கள் எல்லாமே
எங்கோ இடம் தெரியாமல்
மறைந்து கிடக்கின்றன
திறலாய் அணிவகுக்கும் கார்முகிலாய்
நிறம் மறந்து மங்கிப் போகிறது
உருவம் பெற தெரியாமலே
நிலையில் நிறுத்த முடியாது
கனவெல்லாம் நிஜமாகி
அலட்சியப்படுத்திய யாரையேனும் காணும் போது
கண்ணீராய் வெளிப்படுகிறது
ஏன் இப்படியானவருக்கு மட்டும்
கிடைத்துத் தொலைக்கிறது என
வருந்தாத நாளில்லை
புண்ணாகி மண்ணாகி போகத்தானோ
அனல் கொதியாய்
தணல் வலியாய்
நெஞ்சில் சூடேற்றம்
இப்படியும் அப்படியும்
புரட்டிப் போடுகிறது.



கவிஞர் சஹ்னாஸ் பேகம், இலங்கை

# எங்கள் கலை தாய்

கலை மகுடம் புதுபொலிவில்
கலைரங்கம் கண்ணேதிரே
கதி கலங்கும் கலைக்கு
கலையரசி இவள்
தன் பிள்ளைகள் - கண்
முன் வெற்றி கண்ட தாய்.

தாயவள் மாற்றத்தில் மறுபிறவி எடுப்பது
சாதாரணமில்லை.
அதனை கண்டு இதுவரை அவள் சளைத்தும் இல்லை.
இலட்சாதிபதியான மாணவ வெள்ளத்தை
தன் முதல் அணையாக கொண்ட
அரண் கோட்டை அவள் இடம்
யாழ் பல்கலை.

மறந்து போக முடியாது அவள் இடம்
தன்னிடம் கொடுத்த எங்கள் அடையாளம்
பல்கலையில்.




கவிஞர் சியாத்தன். ச. மகேஷ்வரன்

# சலிக்காத வாழ்க்கை

சூரியனின் தாக்கத்தை தாங்காமல்
கண்ணீர் வடிக்கிறது கருமேகம் அதற்கு ஏதுவாக
கண்ணீரை துடைக்க காத்துக் கிடக்கிறது
வறண்டப் பூமி வலிகளும் இதமானது
காய்ந்த விதைகள் துளிர்விடுவதைக்
கண்டு பூறிக்கிறது மேகம்
அவற்றை போலவே தன்னையும் எண்ணி
அயராது உழைக்கும் உள்ளம்
அதிகாலையில் அசலூர் புறப்படுகிறது
ஏழ்மையை போக்க நெற்பயிர் பறிக்கவும் நடவு நடுவதற்கும்
பிள்ளைகளோ அயர்ந்து உறங்குகின்றன
பெற்றவர்களின் மனமோ தூக்கமின்றி அலைகிறது
பயணமோ நெடுந்தூரம் பசிமறந்து பறக்கிறது
பணத்தை எண்ணி பிள்ளையை கரைச்சேர்க்க
விடியலும் வந்தது விடிவில்லா வாழ்வில்
ஓடிக்கொண்டே இருக்கிறது
ஏழ்மையாளனின் வாழ்க்கை



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, சிதம்பரம்

# மரமும் நானும்

இலைகள்
அசைந்து கொண்டேயிருக்கின்றன
விதைத்த கைகள்
தெரியவில்லை
வானம் தண்ணீர்
ஊற்றியிருக்கக்கூடும்
அவ்வப்போது
தண்ணீர் தராமல்
வேர்களை
பலப்படுத்தியிருக்கக்கூடும்
தென்றல் காற்றிலும்
கதிரவன்கள்
என் வியர்வை
ஆவியாகிக் கொண்டிருக்கிறது
எனை
புத்தனாக்க
அது போதி மரமல்ல
புத்தனாகவும்
எனக்கு ஆசையில்லை
சாதாரண மனுசியாக
எழுந்து
நன்றி கூறிவிட்டு
நகர்கிறேன்
இலைகள்
அசைந்து கொண்டேயிருக்கின்றன



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# நினைவில் நீங்காத உறவு



நீலவானோடை நீந்திடும்
நட்சத்திரக் கூட்டம்
நிலவைச் சுற்றிட
நித்தமும் நாட்டம்
தேகம் தழுவிட
தென்றல் வந்திடும்
மோகம் தந்திட
மன்றல் புகுந்திடும்

மன்றலில் இருந்தோம்
மாறாதப் பாசத்துடன்
அன்றிலென வாழ்ந்தோம்
இணைபிரியா நேசத்துடன்
கயல்விழியால் மொழியும்
கனிமொழியாள் வீச்சு
இயல்மொழியால் செப்பிய
இன்னிசையான பேச்சு

களிப்போடு இருந்தோம்
கவலையின்றி வாழ்ந்தோம்
கழிந்த நாட்களில்
கோலகலமாய் இருந்தோம்
கோலத்தை மாற்றும்
கொடுமை செய்தான்
காலனவன் காதலோடு
காரிகையை கொய்தான்

அன்பின் ஆளுமையில்
அவள் இதயமானேன்
அன்னவளோ என்னுள்
இதயத்தில் உதயமானாள்
ஊடலுக்கு வழியில்லை
ஊடியதாய் நடித்தோம்
கூடலிலே மகிழ்ந்திட
காதலைப் படித்தோம்

நீங்காத உறவாய்
நினைவில் நின்றாள்
தாங்காத வலியை
தந்து சென்றாள்
மங்காத அவளுருவே
மனதில் படமானது
அங்கமதில் நடமாடும்
அவளின் இடமானது

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# புதிரின் புதிர்



தேடலுக்கு துணையென
கேள்வியும் நடைபழகி
காதை தீட்டி தீட்டி
கணத்த மௌனத்தை பதிலாக்கி
ஒற்றை கேள்விக்குள்
விழுந்து புரண்ட பதிலில்
திகைப்பும் திகிலும்
காயம்பட்ட பதிலை
திருப்பி எடுப்பதற்குள்
பட்டைத் தீட்டப்பட்டு
குற்றவாளி கூண்டில்
மொய்த்த முறைப்புகள்
தோளைக் குலுக்கி கடப்பதற்குள்
ஆசுவாச பதிலொன்று
அகத்தின்வழியே
அடுத்த கேள்விக்கு
வாயில் மௌனம் பசையென
தலையும் ஆடாத நிலைக்குள்
அவள் கைபிடித்து அவள்
முந்தானையில் முகத்தை மறைத்தே
மௌனத் தோழியின் துணையில்
பதிலை பதுக்கிய நொடிகள்
திமிர் என்ற பெயர்
சூட்டிய உள்ளங்களின் உளறல்
தெரிந்தாலும் கடந்துபோகும்
கவனம்
மாறுபட்ட பதில்களை
சிந்திக்க மறுக்கும் அலும்பின்
அட்டகாசம்

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

# காட்டாறாய்

சிறு அன்பில் துவங்கியதுதான்
சிற்றாறாய் ஓடியதுதான்

சிறு பரிவில் பரிணமித்ததுதான்
சில்லெனத் தென்றலாய் வீசியதுதான்



அதீதமாய்ப் பழகி
அளவிலாது கொண்டாடி

அருமை உணர்ந்து
அகலாது இணைந்து

உறவினை வளர்த்து
உடமையென நினைந்து

பிடித்தங்களில் செழித்து
பேரன்பைப் பொழிந்து

பிரபஞ்சம் அளந்து
பிடிமானங்கள் இறுகிய பின்னர்

காட்டாறாய் வந்துசேர்ந்தது
கொடிய அந்தப் பிரிவு!

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# அது ஒரு காலம்

ஊருவிட்டு ஊருவந்து நாடு நகரமுன்னு வேலை தேடி
அலையரோம் வெம்பிதான் சாகுரோம்.

விவசாய கூலியா பாடுபட்ட எங்க சனம்
எந்த வேலை கிடைத்தாலும் பசி தீர்ந்தா போதுமென
ஆளா பறக்கறோம் அலைஞ்சு சாகறோம்.

உழவு வேலையிலே ஏர்ஓட்ட நாற்றுநட களையெடுக்க
கதிர்அறுக்க களத்து மேட்டில் நெல் அடிச்சி
மலையா குவிச்சிடுவோம் மனமெல்லாம் நெறஞ்சிடுமே.

*அதெல்லாம் ஒருகாலம்* கனவா போயிடுச்சே
ஏர்ஓட்ட நடவுநட களையெடுக்க கதிர்அறுக்க
நெல்லபிரிச்சு நிமிடத்தில் தந்திடும்
*எந்திரம் வந்தாச்சு* எங்க வாழ்வு போயாச்சு.

கரும்பு வெட்ட எந்திரம் ஏரிகுளமுன்னு தூர்வார எந்திரம்
விஞ்ஞான வளர்ச்சியால் எந்திரத்தின் ஆட்சியாச்சி.

மக்களிசை பாட்டும் குலவை சத்தமுமாக கிராமத்து சனமெல்லாம்
நாற்று நட பாட்டு, கதிரருக்க பாட்டுனு, கனவா போன
அந்த வாழ்க்கைதான் திரும்புமா?

வேலை தேடி ஊர்ஊரா நாங்க இங்க அல்லாட
வீட்டு சனம் பிள்ளைங்க வெம்பி கண்ணீரோட.
ஏறுமாடெல்லாம் அடிமாடாபோன கொடும
கதிருவா கடப்பாற போன இடம் தெரியவில்லை
எந்திரத்தின் வரவாலே அத்தனையும் மறஞ்சாச்சி.

*உணவு தானியமுன்னு* விளைவிக்கும் விவசாயிய
கடவுளாபோற்றிட்ட காலமும் போயாச்சு
எங்க வாழ்வும்தான்
ஏர்மாடு கதைதானோ?



கவிஞர் ஜெப்ரி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

உடலில் உலவிடும் ஆன்மா
உடலை விட்டு பிரிகையில்
இரகசிய பாதையில் சென்றிடுதோ?



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

## 7ஆம் திருமொழி: கற்பூரம் நாறுமோ? பாசுரம்10 1-5

ஆண்டாளின் கனவிறுதியில் கூடலதும் நேர்ந்திருக்கும்!
அதரமிர்தம் சுவைபற்றி கேட்கின்றாள்! அந்தரங்கத்தில்
உடனிருப்போர் தாமறிவர்! பான்சஜன்யம் அத்தகைத்தே!
விரும்புங்கால் இதழதனில் வைத்தூதும் போதெல்லாம்
அவ்வமுதச் சுவைசேருமே! எம்பெருமான் தன்னையே
பிரியாதே நிலைப்பதுவே! கரியமேனி நீள்கரத்தில்
வெண்சங்கு! வாசனையும் சுவையதுவும் அமுதம்தான்!
இரண்டாவது பாசுரத்தே பிறந்தயிடம் வளர்ந்த யிடம்
கருதாதே எம்பெருமான் கைத்தலத்தே அசுரர்களை
அச்சுறுத்தும் பேரோசை கொண்டதுதான் வெண்சங்கு!
எதிரிகளை அழித்திடவும் அடியார்கள் வாழ்ந்திடவும்
துணையாகும் வெண்சங்கே! என்றனக்கும் துணையாவாய்
எனறதனிடம் வேண்டுகிறாள்! மூன்றாவது பாசுரத்தே
சங்கமெனும் ஆழ்வார்தான் பேரழகை அனுபவிக்கிறான்!
நான்காவது பாசுரத்தே நீவல்லை ரகசியங்கள்
பேசுதற்கே! தன்னையும் அவனிடத்தே பரிந்துரைக்க
வேண்டுகிறாள்! ஐந்தாவது பாசுரத்தே எம்பெருமான்
கைச்சங்கு இதழ்ரசத்தை எப்போதும் சுவைப்பதனால்
எச்சங்கும் ஒப்பில்லை எனும்தெளிவு சாற்றுகிறாள்!
மற்றைந்தும் பிற்கண்டு கோதைதமிழ் மாந்துவமே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

## பாவகை: வெண் கலிப்பா

உன்நினைவு என்றாலே உள்நெஞ்சில் மகிழ்வுதானே
கன்னமெல்லாம் சுருங்கினாலும் கவியழகு நீதானே
எண்ணமெல்லாம் உன்வாசம் என்னவளே எழுதிடவா
பண்டுபுகழ் உன்னைநாட பலகலையும் பயின்றிடவா
தென்னைமர நிழலெல்லாம் தென்பொதிகை சாரலடி
புன்னகையால் புதுமைசெய்த புதுவாழ்வின் புதையலடி
விழியோரம் நீசிரித்தால் விதிமயங்கும் இதயமடி
எழிலாக நீநடந்தால் எதிர்காலம் மெச்சுமடி
கொஞ்சுகின்ற இதயத்தைக் குடைபிடித்துக் காத்திடவா
அஞ்சிகின்ற வாழ்வியலை அனுதினமும் அணைத்திடவா
அஞ்சாமை எடுத்துரைக்கும் அகவாழ்வின் இலக்கியமே
பஞ்சாக பறக்குதடி பஞ்சகாலம் மனமெங்கும்
முகிலாக உனைநினைத்து முப்பொழுதும் கவிவடித்தேன்
திகிலாக உணர்ந்தேனே தீந்தமிழின் சுவையறிந்தும்
காதலுக்கு தோல்வியில்லை கண்ணெதிரே நீயிருந்தால்
ஆதவனும் உறங்கிடுவான் அரவணைக்கும் நிமிடமெல்லாம்
வயதாகி போகிறதே வசந்தகால பூங்காற்றே
இயலாத நிலைவந்தால் இளைப்பாற்று செங்காற்றே
எப்பிறப்பும் நீவேண்டும் என்வாழ்வின் துணைவியாக
இப்பிறப்பு முடியவேண்டும் இன்று.



கவிஞர் ஏ. தமிழ்நிதன், பல்லடம்

வெஃகாமை பொருள ணைத்து தாராந்து போனதுவோ யிவள் மொழி

தனித்து நின்று இதழ் குவிப்பில்
தனித்த மொழி யானது வாம்

"ம்"
என்ற ஒற்றை மெய்யெழுத்து

'ம்'

கவிஞர் ஜெயப்பிரபா

பெரும்பாலான "ஆரம்பங்கள்" அவமானங்களில் இருந்து தொடங்குவதைப் போல அன்னையின் தொண்டின் தொடக்கமும், அவமானத்தையே அவருக்கு அறிமுகம் செய்து வைத்தது. பரிகாசங்களே பரிசுகளாக கிடைத்தன. ஒரு செல்வந்தரிடம் ஆதரவற்ற பிள்ளைகளுக்காக யாசகம் கேட்க, அந்த செல்வந்தரோ, அன்னை தெரசா மீது காரி உமிழ்ந்தார். அதைத் துடைத்துக் கொண்ட அன்னை, 'இதை நான் வைத்துக் கொள்கிறேன், என் குழந்தைகளுக்கு ஏதாவது கொடுங்கள்' என மன்றாடுகிறார். அடுத்தவரின் வலியை தன் வலியாய் உணர்பவர்கள் மட்டுமே இப்படி நடந்து கொள்ள முடியும். தனக்கான வாழ்க்கையே பிறருக்கான சேவை என்ற அன்னையின் கொள்கை, ஆயிரம் அவமானங்களைத் தாங்கவல்லது. ஆயினும் பாலையில் விழும் மழைத்துளிபோல, பரந்த மனம் கொண்ட ஒருசிலர் அன்னையின் அன்பு உள்ளத்திற்கு அடிபணிந்தனர்.

அவமானங்களில் தான்
தொடங்குகின்றன ஆரம்பங்கள்
பரிகாசங்களால் பழுத்தே
பரிசுகள் சுவைக்கக் கிடைக்கின்றன



கவிஞர் ராஜீ ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

# உரையாடல்

ஒரு முட்டாளுடன்
ஒரு அறிவாளியுடன்
ஒரு புத்திசாலியுடன்
ஒரு சாதனையாளனுடன்
ஒரு தோல்வியாளனுடன்,
ஒரு பைத்தியக்காரனுடன்,
ஒரு மணிநேர உரையாடல்,
இவன் இவனுடன் உரையாடும் வேளையது.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# சிரிப்பும் புன்னகையும்

பிரான்ஸ் நாட்டு அழகி மோனலிசாவின் புன்னகையே
உலகம் முழுவதும் பேசப்பட்டது.
நம் நாட்டு பெண்களுக்கும் புன்னகைதான் வருமே
பொன்னகையை கண்டாலே!

வாய்விட்டு சிரித்தாலே நோய் விட்டுப் போகுமே!
சிரிப்பிலே பலவகை உண்டு.
ஆணவச் சிரிப்பு, ஏளன சிரிப்பு, ஆனந்த சிரிப்பு, பரிகாச சிரிப்பு,
வெற்றி சிரிப்பு இப்படி பலவகை சிரிப்புகள் உண்டு.
புன்னகை மலர்ந்தால் சிரிப்புதான் வருமே!

நம் காந்தி அண்ணல் சிரிப்பும் சந்தோஷ சிரிப்பு தானே!
நீண்ட நாள் நண்பர்களை பார்த்தாலும்
நம் முகத்தில் புன்னகைத்தான் மலருமே!
அகத்தின் அழகு முகத்தில் தான் தெரியுமே!




புதியதாக வந்த மருமகள் அறுசுவையும் சமைத்தால்
நமக்கு புன்னகைத்தான் மலருமே!
புதிய ஆடை , அணிகலன்கள் கண்டாலே புன்னகை.
அணிந்தாலோ புன்னகையோ புன்னகை.
உலகம் முழுவதும் உணர்ந்து கொள்ளும் மொழி புன்னகை
எதிரியையும் கூட வசப்படுத்தும் புன்னகை.

கவிஞர் ஆ.கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# ரத்தன் டாடா

**28-12-1937 - 09-10-2024**

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து ஏழாமாண்டு
திசம்பர்த் திங்கள் இருபத்து எட்டாம்நாள்
மும்பையில் உதித்த நன்முத்து ரத்தன்டாடா!
தந்தையின் வழியில், தடைகளைத் தாண்டி
வணிகத்தில் வீரநடை போட்ட வெற்றித்திருமகன்!
வசீகர வர்த்தகத்துக்கு வித்திட்ட பெருமகன்!
இந்தியாவின் பெருமையை உலகறியச் செய்த
நற்குடிமகன்! நவீன இந்தியாவின் கட்டமைப்பில்
அன்னாரின் பங்களிப்பு அளப்பரியது! குண்டூசியோ
கனரக வாகனமோ உற்பத்தியில் தனித்துவம் !
சாமானியருக்கும் மகிழுந்து கனவு நனவாக
வேண்டுமென நானோ கார் உருவாக்கம்!
பொருளாதார தாராளமயம் பெருகிய தருணத்தில்
மறுசீரமைப்புப் பணிகளால் மகத்தான வெற்றிகண்டார்!
இரசாயனம், மென்பொருளென இன்னும் பல்துறைகளிலும்
வருமானம் உயரும்வகை வணிகத்தில் முன்னேற்றம்!
பணம்தான் முக்கியமெனக் கருதாத குணமுடையோன்!
இடுக்கண் வரினும் எதிர்கொள்ளும் திறனுடையான்!
படுசேதமடைந்த மும்பை தாஜ் ஹோட்டலினை
மனம் தளராமல் மறுசீரமைப்பு செய்தாரே!
திருமணமாகாத ரத்தன்டாடா! நான்குமுறை காதல்தோல்வி!
தனியிடம் உலகச்சந்தையில் டாடா குழுமத்திற்கு!
பின்னணியில் பேருழைப்பைத் தந்தவர் டாட்டா!
மிகப்பெரிய உச்சத்தை வணிகத்தில் தொட்டாலும்
அகங்குளிர உதவிய எளிமையான மாமனிதர்!
தான்பயின்ற பல்கலைக் கழகம்,கல்லூரிகளுக்கு
பல்லாயிரம் கோடிகளை வாரி வழங்கியவர்!
பத்மபூஷண், பத்மவிபூஷண் விருதுகளைப் பெற்றாரே!
திறமையான விமானி! பெருமழைக் காலத்தில்
தெருநாய்களுக்கு இடமளித்த கருணையுள்ள மனிதர்!
அவரின் மறைவு இந்தியாவிற்கு பேரிழப்பு!
அன்னாரின் ஆன்மா சாந்தியடைய வேண்டுவமே!



*கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி*

# செல்லமகள் வாழியவே

மாணிக்க மரகதமே மனசெல்லாம் நீதானே
வானுயர்ந்த அன்பாலே வலிமை சேர்க்கும் பெண்மானே
தேனாக உன்வாழ்வும் தித்திக்க எந்நாளும்
ஏணியாக உன்பண்பே இருக்கட்டும் புவியினிலே

அன்போடு பொறுமையினை அணிந்திடுக அணியாக
இன்பமதும் காலடியில் இணக்கமாகும் என்றென்றும்
வென்றிடுக யாவையுமே வெண்மனது காரிகையே
நின்றுபேசும் வகையினிலே நிலைக்கட்டும் உன்புகழே

பல்லாக்கில் உன்வினைகள் பாரினிலே வலம்வரட்டும்
பல்லாண்டு பல்லாண்டு பலகோடி நூறாண்டு
செல்லமகள் வாழியவே செழிப்போடு வாழியவே
நல்லோர்கள் வழிநின்று நயமாக வாழியவே



கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# உதய தாரகை

## நாடகம் காட்சி-6

இடம் -மருத்துவமனை

**பாத்திரங்கள்: எழிலரசி, சகாய நாதன், மெர்லின், எமல்டா**

**எழிலரசி :** எங்கே எமல்டாவைக் காணோம்? ரோட்ரிக்ஸ் எப்படி இருக்கிறாரோ?

**சகாய நாதன் :** உள்ளே போய் நர்சிடம் கேட்டுப் பார்க்கலாம். (எமல்டா உள்ளே வந்து) வாருங்கள்

**எழிலரசி :** எமல்டா மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்கள் சிரித்த முகத்தைப் பார்ப்பதற்கு ரோட்ரிக்ஸ் எப்படி இருக்கிறார்.

**எமல்டா :** ஓரளவு குணமடைந்து முக்கிய கட்டத்தை தாண்டி விட்டார். இன்னும் ஒரு மணி நேரத்தில் ஐசியு-விலிருந்து மாற்றி விடலாமென்று சொல்லி இருக்கிறார்கள்.

(உள்ளேயிருந்து இங்கே எமல்டா யார்? என்று குரல் வர)

இருங்கள் இப்போது வருகிறேன் அவருக்கு என்னவாயிற்றோ?

**சகாய நாதன்:** பாவம் எமல்டா எவ்வளவு தத்தளிக்கிறார் பார். தன் கணவனை இழந்து விடுவோமோ என்று பரிதவிக்கிறதைப் பார்த்து பாவமாக இருக்கிறது.

**எழிலரசி :** இந்த ஆண்களை குடிக்காதீர்கள் என்று சொன்னால் கேட்க வேண்டியது தானே பாருங்கள். அவர் குடித்தே இப்படி ஆகி விட்டார். இன்னும் எத்தனை குடும்பங்களில் இந்த நிலைமை.

**சகாய நாதன் :** ஆமாம். தேன்மலர் குடும்பத்தைப் பார்... குமார் இறந்து போன பிறகு என்ன செய்வது என்று அவன் குடும்பம் ஆடிப் போய் நிற்கிறது. திரும்பவும் இந்த எமல்டா பதை பதைப்பாக வருகிறாளே என்ன விஷயம்.

கவிஞர் இரஜகை நிலவன்

# உதய தாரகை

## நாடகம் காட்சி-6

(எமல்டா உள்ளே வர)

**எழிலரசி :** வாங்க எமல்டா என்னவாயிற்று.

**எமல்டா :** தீவிரக் கட்டத்தை தாண்டி விட்டார் ஒரு முறை விழிப்பு வந்து என்னை தேடியவர் திரும்பவும் தூங்கி விட்டார். வாருங்கள். உள்ளே போய் பார்க்கலாம்.

**எழிலரசி :** ஏதோ தேவனுடைய கிருபை வாருங்கள் ரோட்ரிக்ஸை பார்த்து விட்டு வரலாம்.

**சகாய நாதன்:** ஐசியு உள்ளே நம்மையெல்லாம் அனுமதிப்பார்களா?

**எமல்டா :** அவரை ஆர்டினரி பெட்டுக்கு மாற்றியாகி விட்டது.வந்து பாருங்கள்.

(மூவரும் உள்ளே வர ரோட்ரிக்ஸ் இப்போது எப்படி இருக்கிறார்)

**சகாய நாதன் :** ரோட்ரிக்ஸ் இப்போது எப்படி இருக்கிறீர்கள்?

**ரோட்ரிக்ஸ் :** இப்போது உடல்நலமாக இருக்கிறது. டாக்டர் ரெஸ்ட் எடுத்துக் கொள்ள சொல்லியிருக்கிறார்.

**எழிலரசி :** எப்படியோ கடவுள் உங்களைக் காப்பாற்றி விட்டார். எமல்டா உங்களுக்காக எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் தெரியுமா?

**ரோட்ரிக்ஸ்:** பாவம் அவளுடைய ஜெபம் தான் என்னைக் குணமாக்கிற்று

**சகாய நாதன் :** உண்மையிலே வல்ல தேவன் உங்களைக் குணமாக்கி திரும்ப ஒரு மறு உயிர்ப்பு தந்திருக்கிறார்.

**எமல்டா :** கண்டிப்பாக கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும்.என் கணவர் வீடு திரும்பியதும் கண்டிப்பாக ஒரு நன்றி திருப்பலி ஒப்புக் கொடுக்க வேண்டும்.

**எழிலரசி :** நாமெல்லாம் இப்போது சேர்ந்து இறைவனுக்கு நன்றி கீதம் பாடலாம்.

முற்றும்

கவிஞர் இரஜகை நிலவன்

# அன்புமொழி

## நூல் அனுபவம்

## கவிதைகள்

**இளையவன் சிவா; வானவில் பதிப்பக வெளியீடு**
**பக்கங்கள் 80; விலை ரூபாய் 60**

அன்பு என்கிற வார்த்தை,அதன் மகத்துவத்தை,உயிர்ப்பை இழந்து ஒரு அபத்தச் சொல்லாக மாறி விட்ட மனித வாழ்வில்,கவிதை வடிவிலான வார்த்தைகளில் அன்பைப் பாடுகிற ஒரு தொகுப்பு.

பாறையை முட்டும் மழை
அற்புத சுனையை உருவாக்குவது போல்
நம்பிக்கை நிறைந்த மனதுடன்
கருணை நீர் கொண்டு
அன்பை விதையுங்கள்
எல்லா மனதிலும்
நல்லன பூக்கும்

பாறையை முட்டும் மழை,அற்புத சுனையை உருவாக்குவது போல் என்கிற வரி எத்தனை அழகானதாய் இருக்கிறது.

பேசித் தீராத பேரன்பை எப்படியெல்லாம் வார்த்தைகளில் வடித்திருக்கிறார் பாருங்கள்.




பூட்டிய மனங்களில்
புன்னகையைப் பூக்க வைக்கும்
மந்திரக் கோல்
இறுகிப் போன கரங்களில்
கருணையை விதைக்கும்
நீருற்று திசையற்றுத் திரியும்
குழப்பங்களுக்கு
வழிகாட்டும் ஒளிக்கீற்று
அன்பைத் தவிர வேறொன்றுமில்லை.

*கவிஞர் ஜி சிவக்குமார்*

அன்பும்,விதையும் ஒன்றே என்கிறது இந்தக் கவிதை.யாரால் மறுக்க முடியும்?

விதையும் அன்பும் ஒன்றே
விதைப்பது ஒருவராயிருக்க
பலனை அறுவடை செய்வது
பலராயிருக்கும்
மழையைப் போல்
பேதம் பார்ப்பதில்லை அன்பு

இந்தக் கவிதையில் ஒரு சிறு திருத்தம் தேவைப்படுகிறதென்று நினைக்கிறேன். மழையைப் போல் பேதம் பார்ப்பதில்லை அன்பு என்ற வரிகள்,மழை பேதம் பார்க்கிறது என்ற தவறான புரிதலை உண்டாக்கி விடக் கூடுமல்லவா? மழையைப் போலவே என்றிருந்தால் மிகச் சரியாக இருந்திருக்குமென்று நம்புகிறேன்.


மனித மனங்களில் மலர்ந்து மனம் பரப்பும்படி வாசிக்கிற அனைவருக்குள்ளும் அன்பின் விதைகளைத் தூவுகிற தொகுப்பு.

நேர்த்தியான வடிவமைப்பிற்கும், தமிழ் நிதி,யாழினியின் ஓவியங்களுக்கும் நல்வாழ்த்துகள்.

சட்டைப் பைக்குள் வைத்து விட முடிகிற அளவுள்ள தொகுப்பு.தொகுப்பை உங்கள் சட்டைப் பையில் வையுங்கள்.தொகுப்பின் அன்பான வார்த்தைகளை,உங்கள் சட்டைப் பைக்கு வெகு அருகிலிருக்கும் உங்கள் இதயத்தில் வையுங்கள்.

கவிஞர் ஜி சிவக்குமார்

எழுத்துச் செம்மல்'' இரஜகை நிலவன்




புவனா நீ ஒண்ணும் சின்னப் பெண் இல்லே. இருபத்தாறு வயசில தான், எங்களால் அதுவும் உனக்கு சிவாவைத் தான் கல்யாணம் பண்ணி வைக்க முடிஞ்சுது. நீ தான் நல்ல முறையில் குடும்பம் நடத்தப் பழகிக் கொள்ளணும். அழக் கூடாது புவனா. அழுது அழுது வீணாக சோகப்படுகிறதை விட எது வந்தாலும் என்னால் சமாளிக்க முடியும்னு மனசை திடப் படுத்திக் கொண்டு, வர்றதை எதிர்த்து நின்னேன்னு வச்சுக்கோ, அப்புறம் வாழ்க்கையும் கூட உன் காலுக்கு முன்னாலே முட்டிப் போடும்.

''அது சரி தாம்மா நம்ம சித்தி மகள் தேவகி இறந்தவுடன் நான் துடிச்சுப் போனபோது கூட, இப்படி சிவா அத்தானை கட்டிக்குவேன்னு நான் நெனைக்கலே. சரி, இது தான் எனக்கு அமைஞ்சதுன்னு சந்தோசமா வாழ்க்கையை தொடங்கலாம்னு நெனச்சா இந்த திவ்யாவை என்னாலே சமாளிக்க முடியலை.''

''என்ன புவனா இப்படி பேசற? இந்தச் சின்னப் புள்ளையை சமாளிக்க முடியலைன்னு சொல்றியே. குழந்தைகள் பாசத்துக்கு ஏங்குறவங்க. அன்பைக் கொட்டு. ரௌத்திரம் காட்டுவதை மறந்திடு.''

''அம்மா, நான் என்ன சொல்ல வர்றேனா...''


''நல்லா புரியுது புவனா, புதுப்பொண்ணா வாழ்க்கையைத் தொடங்கப் போற நேரத்துலே ஒரு பிள்ளைக்கு அம்மாவா அதை சாந்தப்படுத்திக் கொண்டு, அதோடு போராடி ஜெயித்து, அதன் மூலம் புருஷனை ஜெயிக்க வேண்டிய சூழ்நிலையை மற்ற பெண்கள் மாதிரி இல்லை புவனா நீ. தேவகி இடத்தை நிரப்பப் போறவ நிறைய விஷயங்களை எதிர் கொண்டாகணும். எது நடந்தாலும் சிவா என்ன சொன்னாலும், கோபப்படாமல் அதே சமயத்திலே தன் மானம் போகாமல், அசிங்கப்படாமல் நடந்துக்கணும்.''

# வாழ்க்கை என்னும் கவிதை



''நீ சாதாரணப் பொண்ணாக மும்பைக்குப் போய் குப்பை கொட்டப் போகவில்லை புவனா. எதிர் நீச்சல் போடும் வீராங்கனையா மாறணும். அப்பத்தான் நீ மாட்டிக் கொண்டிருக்கிற இந்த வாழ்க்கை வேஷத்துலே ஜெயித்துக் காட்டமுடியும்.''

நாவலை அழகாக நதிபோல இழுத்துச் செல்கிறார் நாவலாசிரியர்.



# அ.கி.பரந்தாமனார்

கட்டுரை

## பிறப்பு

அ.கி.பரந்தாமனார் 1902 சூலை 15 ஆம் நாள் சென்னையில் வாழ்ந்த கிருட்டிணசாமி — சிவக்கியானம் இணையரின் நான்காவது மகவாகப் பிறந்தார்.

## கல்வி



சென்னை வேப்பேரியில் உள்ள தூய பவுல் (செயின்ட் பால்) உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதிவரை பயின்றார். பணியிலிருந்து விடுப்புபெற்று சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்று இடைக்கலை (Intermediate) நிலையையும் அரசியல், வரலாறு ஆகியவற்றைச் சிறப்புப் பாடங்களாகப் பயின்று இளங்கலை (Bachelor of Arts) பட்டத்தையும், 1949 ஆம் ஆண்டில் முதுகலை (Master of Arts) பட்டத்தையும் பெற்றார்.

## பணி

அ. கி. பரந்தாமனார் பள்ளிப் படிப்பினை முடித்ததும் ஓராண்டு சென்னை கர்னாடிக் பஞ்சாலையில் எழுத்தராகப் பணியாற்றினார். பின்னர் சென்னை வேப்பேரியில் உள்ள தூய பவுல் உயர்நிலைப் பள்ளியில் ஏறத்தாழ 24 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றினார். அதன் பின்னர் 1950 சனவரி 8 ஆம் நாள் மதுரையில் உள்ள தியாகராசர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்தார். அங்கு 17 ஆண்டுகள் பணியாற்றி 1967 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

கட்டுரை

### பாராட்டுகள்

அ. கி. பரந்தாமனாருக்கு 60 ஆம் அகவை நிறைந்ததும் மதுரை திருவள்ளுவர் கழகம் அவருக்கு மணிவிழா கொண்டாடியது. அப்பொழுது மதுரை எழுத்தாளர் மன்றம் அவருக்குப் பைந்தமிழ்ப் பாவலர் என்னும் பட்டத்தை வழங்கியது.

தஞ்சையில் 1981ஆம் ஆண்டில் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது. அவ்விழாவில் அ. கி. பரந்தாமனாருக்கு தமிழக அரசின் திரு. வி. க. விருது வழங்கப்பட்டது.

### படைப்புகள்

- காதல்நிலைக் கவிதைகள் (1954)
- எங்கள் தோட்டம் (1964) - சிறுவர் பாடல்
- பரந்தாமனார் கவிதைகள்
- கவிஞராக
- நல்ல தமிழ் எழுத வேண்டுமா?
- தமிழ் இலக்கியம் கற்க
- திருக்குறளும் புதுமைக் கருத்துக்களும் (1963)
- பன்முகப் பார்வையாளன் பாரதி
- பேச்சாளராக
- மதுரை நாயக்கர் வரலாறு
- திருமலை நாயக்கர் வரலாறு
- தலைசிறந்த பாண்டிய மன்னர்கள்
- வரலாற்றுக் கட்டுரைகளும் பிறவும்
- வாழ்க்கைக்கலை
- கோமஸ்

### மறைவு

அ. கி. பரந்தாமனார் 1986 ஆம் ஆண்டில் சென்னையில் மரணமடைந்தார்.

### நன்றி

குழந்தை இலக்கிய முன்னோடிகள், ஆர்.வி.பதி
https://ta.wikipedia.org/wik

திரு அ. வில்சன், இதழாசிரியர்

# நாளை நமதே

நம்மை

உடைத்த நாள்களே,

நம்மை

உருவாக்கிய நாள்கள்.

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com